

தூத்துக்குடி முத்தையாபுரம் எம்.டி.ஏ. காலனி பகுதியில், தேசிய தூய்மை காற்று திட்டத்தின் கீழ் ரூ. 84.50 இலட்சம் மதிப்பீட்டில் பெண்களுக்கென பிரத்யேக ”மகளிர் பூங்கா என்னும் பிங்க் பூங்காவை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார். இந்த நிகழ்வில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் பிரியங்க, மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பொதுமக்களின் எதிர்காலக் கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறிய

# “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 10 -**

**தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2026) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, பாடியநல்லூரில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை, தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் வரை பயன்பெறும் வகையில் பல்வேறு சமூக நலத் திட்டங்களை அறிவித்து வெற்றிகரமாக செயல்படுத்தி அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்கள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கி வருகிறது.

அந்த வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் **“உங்க கனவ சொல்லுங்க”** என்ற திட்டத்தினை செயல்படுத்த முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

**“உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தில்,** தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதி களில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி கண்டறிய எடுக்கப்படும் முன் மாதிரி முயற்சியாகும். இந்த களப்பணி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பணிக்காக மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த சுமார் 50,000 உறுப்பினர்கள் தன்னார்வலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இப்பணிகளை மேற்கொள்ள உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளை பதிவு செய்ய தனியாக கைபேசி செயலி இதற்கென உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்த விவரங்கள் அனைத்து ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலும், நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு கள் மூலம் முன்கூட்டியே முறையாக விளம்பரப்படுத்தப் பட்டு, விழிப்புணர்வு பணிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை ஒருங்கிணைக்கும்.

தன்னார்வலர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு முறை செல்வர். முதல் முறை வீட்டிற்கு செல்லும் போது விண்ணப்ப படிவத்தினை குடும்பத் தலைவர் / உறுப்பினரிடம் வழங்குவர். அவ் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசு திட்டங்களின் பெயர் பட்டியல் விவரங்களை அவர்களிடம் தெரிவித்து, படிவத்தினை பூர்த்தி செய்து தரும்படி கோருவர்.

தன்னார்வலர்கள், இரண்டு நாட்களுக்குப்பிறகு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை சரிபார்த்து கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்வர். கைபேசி செயலியில் பதிவேற்றியப் பின்னர் அக்குடும்பத்திற்கு தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டையினை வழங்குவர். இந்த அட்டை மூலம் www.uks.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களது கனவு / கோரிக்கையின் நிலை குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.

நேற்று பொன்னேரி வட்டம், பாடியநல்லூரில் நடைபெற்ற “உங்க கனவ சொல்லுங்க” திட்ட தொடக்க விழாவில், முதலமைச்சர் அவர்களிடம் பயனாளிகள் நேரடியாக தங்கள் கருத்துக்களையும், கனவுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, திருச்சி ராப்பள்ளி, திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களைச் சார்ந்த பொதுமக்கள் தங்கள் கருத்துகளையும் கனவுகளையும் காணொலி வாயிலாக முதலமைச்சர் அவர்களிடம் பகிர்ந்து கொண்டனர்.

பின்னர், முதலமைச்சர் அவர்கள், இந்நிகழ்ச்சியில் தங்கள் கனவுகளை தெரிவித்த பெண்மணிகளுக்கு இத்திட்டத்தில் பங்கேற்ற தற்கான கனவு அட்டைகளையும், இத்திட்டப் பணிகளை மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு தொப்பி மற்றும் கைப்பேசி data card ஆகியவற்றையும் வழங்கினார்.

இவ்விழாவில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சசிகாந்த் செந்தில், டாக்டர் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், எஸ்.சந்திரன், டி. ஜெ.கோவிந்தராஜன், வி.ஜி. ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், கே.பி.பி. சங்கர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

# வாலாஜாபாத் வடக்கு ஒன்றியத்தில் பொங்கல் விழா!

## ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு அறிக்கை!

*காஞ்சிபுரம், ஜன. 10-*

*வாலாஜாபாத் வடக்கு ஒன்றியத்தின் சார்பில் திராவிடப் பொங்கல் விழா இன்று (10.1.2026 சனிக்கிழமை) 11 மணி அளவில், வீனஸ் ரெசார்ட் பரந்தூரில் திராவிட பொங்கல் விழா நடைபெறுகிறது.*

*சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் தலைமையில், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட கழகத் துணைச் செயலாளருமான சிறுவேடல் க.செல்வம் மற்றும் கழக கொள்கை பரப்பு செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி. எழிலரசன், காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஜெ.ராமகிருஷ்ணன் மற்றும் ஒன்றிய குழு பெருந் தலைவர் ஆர்.கே. தேவேந்திரன் அவர்கள் எஸ்.ராஜலட்சுமி குஜராஜ் அவர்கள் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர் .கழக மூத்த முன்னோடிகள். பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு திராவிட பொங்கலை சிறப்பாக கொண்டாடிட வாருங்கள்! என்று ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.*



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட ஆர்.கே.பேட்டை கூட்டுறவு நியாய விலை கடையில் தமிழர் திருநாள் தைப்பொங்கலை அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பரிசு தொகுப்பு மற்றும் ரூபாய் 3 ஆயிரம் ரொக்கம் தொகை ஆகியவற்றை மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ வழங்கினார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பா.சம்பத், முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் திலகவதி ரமேஷ், ஒன்றிய நிர்வாகிகள் சத்யராஜ், ஏ.கே. திருவேங்கடம், வெங்கடேசன், டில்லி பாபு ,நவீன் குமார், ரவி, ராஜேந்திரன், சுவாமிநாதன், பாஸ்கரன்,சதீஷ், திருநாவுக்கரசு, பாலு, கே.ஜி.வெங்கடேசன், ரஜினி, ஜெய்சங்கர், ரமேஷ்,பூபதி, உமாபதி, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2026) தமிழ்நாடு சைக்கிள் சங்கத்தின் 60 ஆம் ஆண்டு விழாவையொட்டி, சைக்கிள் பந்தயங்களில் ஆர்வத்துடன் பங்கேற்கும் அரசு பள்ளிகளைச் சேர்ந்த 60 மாணவ, மாணவிகளுக்கு பந்தய சைக்கிள்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு சைக்கிள் சங்கத்தின் நிர்வாகிகள் எம்.சுதாகர், மாணிக்கம், வினோத் காந்தி, அரசு அலுவலர்கள் மற்றும் சைக்கிள் பந்தய வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (9.1.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற ”UMAGINE TN–2026” இரண்டு நாள் தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் Backstage Pass Institute of Gaming & Technology, Knack Studios Media, Spendfio India, Ayelet Technology, Chennai Games Studio, Beebox Studios, Visual Effects Game Animation Society, IIT Madras CDOT SAMGNYA Technologies முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.பி.கார்த்திகேயன், மின்னாளுமை இயக்குநர் / தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை நிருவாக அலுவலர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இந்திய தொழில்நுட்ப கழக ஆராய்ச்சி பூங்கா (IIT MRP) தலைமை செயல் அலுவலர் நடராஜன் மல்லுபிள்ளை, இந்திய தொழில் கூட்டமைப்பின் (CII) தலைவர் திரு.சி. தேவராஜன், தகவல் தொடர்புத் துறை நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு சைக்கிள் சங்கத்தின் 60 ஆம் ஆண்டு விழாவையொட்டி

# அரசு பள்ளிகளைச் சேர்ந்த 60 மாணவ, மாணவிகளுக்கு பந்தய சைக்கிள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன. 10-

முதலமைச்சர் அவர்கள் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு பெறும் வகையில் சென்னையில் ஆசிய, சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டு போட்டிகளை தொடர்ந்து நடத்தி, சென்னையை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாகவும், உலகின் முக்கிய நகரமாகவும் உருவாக்கி வருகின்றார்.

மேலும் விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருகின்றார். மேலும், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்கி வருகின்றார்.

குறிப்பாக சைக்கிளிங் விளையாட்டு போட்டிகளுக்கு மிகுந்த ஆதரவு அளிக்கும் வகையில் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் முதல் பயனாளியாக சைக்கிள் வீராங்கனை தபிதா தேர்வு செய்யப்பட்டு அவருக்கு அதிநவீன பந்தய சைக்கிளை வழங்கினார். சர்வதேச மற்றும் தேசிய அளவில் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த சைக்கிள் வீரர், வீராங்கனைகளுக்கு இதுவரை சுமார் 2.00 கோடி மதிப்பிலான 16 அதிநவீன பந்தய சைக்கிள்களையும், பதக்கம் வென்று வந்த வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை, சைக்கிளிங் வீரர்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்சியாளர்கள் நியமனம், சைக்கிளிங் வீரர்களுக்கு விடுதி வசதி ஆகியவற்றை அளித்துள்ளார்கள். மேலும் முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இந்தியாவின் முதல் BMX Track அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

Asian MTB Championship போட்டி, Gravel World Championship போட்டிகளில் பங்கேற்கவும் வீரர்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளார்கள். செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையூரில் உள்ள சைக்கிள் போட்டிகளுக்கான சைக்கிள் பந்தய தளத்தை Cycling Velodrome மறுசீரமைத்து, தேசிய அளவிலான போட்டிகளை நடத்தியுள்ளார். சாம்பியன் அறக்கட்டளையின் கீழ் பந்தய சைக்கிள் பெற்ற Para Athlete பிரதீப் Asian Games Para Event தேர்வு பெற்றுள்ளது சிறப்பு வாய்ந்ததாகும்.

முதலமைச்சர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரின் முயற்சிக்கு துணை நிற்கும் வகையில் தமிழ்நாடு சைக்கிள் சங்கத்தின் (TNCA) 60 ஆம் ஆண்டு வைரவிழா இன்று (9.1.2026) தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் முகாம் அலுவலகமான குறிஞ்சி இல்லத்தில் நடைபெற்றது.

1966ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு சைக்கிள் சங்கம், இளம் வீரர்களின் திறன்களை மேம்படுத்தி, தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கும் வீரர்களை உருவாக்கி வருகிறது. கடந்த 60 ஆண்டுகளில் பல தங்கப் பதக்கங்களை தமிழ்நாட்டிற்கு பெற்றுத் தந்துள்ள TNCA, சைக்கிள் விளையாட்டை ஒரு கலாச்சார அடையாளமாகவும் வளர்த்துள்ளது.

30-க்கும் மேற்பட்ட தேசிய அளவிலான சைக்கிள் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளதுடன், 2024ஆம் ஆண்டு 76வது தேசிய டிராக் சைக்கிள் சாம்பியன்ஷிப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்தி பாராட்டுப் பெற்றது. இதன் தொடர்ச்சியாக, 2026ஆம் ஆண்டு Track Asia Cup போட்டியை தமிழ்நாட்டில் நடத்தும் வாய்ப்பையும் பெற்றுள்ளது.

“60 Cycles for Young Dreams” என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த விழாவில், சைக்கிள் பந்தயங்களில் ஆர்வத்துடன் பங்கேற்கும் அரசு பள்ளிகளைச் சேர்ந்த 60 மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு சைக்கிள் சங்கத்தின் (TNCA) 60ஆம் ஆண்டு விழாவையொட்டி, சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சைக்கிள்களை வழங்கினார்.

மேலும் மூத்த சைக்கிள் வீரர்களுக்கும், சர்வதேச, தேசிய அளவிலான சிறந்த சைக்கிள் வீரர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் கேடயங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சைக்கிள் சங்க நிர்வாகிகள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு சைக்கிள் சங்கத்தின் நிர்வாகிகள் எம்.சுதாகர், Dr. மாணிக்கம், திரு. வினோத் காந்தி, அரசு அலுவலர்கள் மற்றும்வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



பொங்கல் திருநாளை முன்னிட்டு 123 அ வட்டக் கழக நிர்வாகிகள் பாக உறுப்பினர்களுக்கு பொங்கல் பரிசை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மயிலை மேற்குப் பகுதிச் செயலாளர் நந்தனம் மதி எம்.சி., 123 அ வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன், ஜி.முருகன் மற்றும கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.